26th August 1961]

THE HON. SRI P. KAKKAN : எனக்குத் தெரிந்த மட்டிலும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு புதிதாக வீடுகள் கட்டுவதற்காக இந்த திட்டமில்லே. இப்போது அங்கு காலியாக உள்ள இடங்கள் பின்னுல் தேவைப்படும். ஆகவே இப்போது சட்டசபை அங்கத்தினர்கள் மட்டும் அவரவர்கள் குடும்பத்தோடு தங்குவதற்கு, அவர்கள் ஹௌஸ் கமிட்டியிலே உதவி சபாநாயகர் தலைமையில் முடிவு செய்தபடி ஏற்பாடு செய்ய இருக்கிறேம். அது விஷயம் பரிசீலனே செய்யப்பட்டு, அவர்களுக்கு மட்டும் இடம் கொடுக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

Misappropriation of money

***1402 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகா, கீழ்பட்டி கிராமம் மணியக்காரர் பணம் கையாடல் விஷயமாக 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதி கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கு வி. கே. கோதண்டராமன், எம்.எல்.ஏ. அவர்கள் எழுதிய லெட்டர் சேர்ந்ததா ?

(இ) இது விஷயமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes, Sir.

(இ) The District Revenue Officer, North Arcot, has reported that the ex-headman of Kalpatti village, Gudiyattam taluk, North Arcot District, was ordered to be removed from service by the Sub-Collector, Tiruppattur, after a thorough examination of the case and that the action of the Sub-Collector, Tiruppattur is just and proper. He has also reported that the present acting headman of the village is not related to the ex-headman.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், சிறு சேமிப்பு நிதிக்காக வசூல் செய்த பணத்திலிருந்து 2,000 ரூபாய் கையாடல் செய்த குற்றத்திற்காக வேண்டி தண்டனே விதிக்கப்பட்டு, ஜெயிலில் இருந்து வந்த அந்த நபரை "டிஸ்மிஸ்ட் பிரம் சர்வீஸ்" என்று உத்தரவு போடுவதற்குப் பதிலாக "ரிமூவல் பிரம் சர்வீஸ்" என்று போட்டு, அந்தக் காரணத்தினுலே அவருடைய உடன்பிறந்த தம்பியை மீண்டும் அந்தப் பதவியிலே வைத்துக்கொண்டு, அங்கே இருக்கக்கூடிய கிராமத்திலே உள்ளவர்களுக்கு தொல்லே கொடுத்துக்கொண்டு இருப்பதற்குக் காரணம், இன்றைக்கு இருக்கக்கூடிய வெள்ளேக்காரன் செய்த ரெவின்யூ போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்தான் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே இதைத் திருத்தி, "ரிமூவல் பிரம் சர்வீஸ்" என்பதற்குப் பதில் "டிஸ்மிஸ்ட் பிரம் சர்வீஸ்" என்று உத்திரவு போடுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் முன்னரே சொன்னேன். இப்போது வேலே செய்யக் கூடியவர் அவருடைய சொந்தக்காரர் அல்லவென்று. இரண்டாவது, ஒரு ஆளே வேலேயிலிருந்து டிஸ்மிஸ் செய்வதா, ரிமூவல் செய்வதா என்பது டெக்னிகல் பாயிண்ட். இதையெல்லாம் அந்தந்த ஆபீசர்கள் தங்கள் டிஸ்கிரிஷனில் செய்வார்கள். ஆகவே அந்த அளவிலே இதைச் செய்திருக்கலாம். இன்னென்று, அவர் பூராப் பணத்தையும் கட்டி விட்டார் அதனுல் இப்படிச் செய்திருக்கலாம். வேறு ஒன்றுமில்லே.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கக்கூடிய பதில் ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்னுல் வந்திருக்கலாம். அந்த நேரத்தில் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவது போல அவருக்கு உறவினர் அல்லாதவர் இருந்திருக்கலாம். ஆனுல்

அது இப்பொழுது உண்மை அல்ல. பத்து நாட்களுக்கு முன்னுல் அவருடைய தம்பி நியமிக்கப்பட்டிருக்கிருர் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த விஷயம் எனக்குத் தெரியாதது வாஸ்தவம்தான். நான் அதைப்பற்றி விசாரிக்கிறேன்.

Flood banks (the Kannanar)

* 1403 *Q*.—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு தாலுக்காவிலுள்ள கண்ணனுறு வெள்ளத்தடுப்பு வேலைகள் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : Flood banks on the right side of Kannanar have already been formed in Periakottai village limits. Proposals for forming flood banks to Kannanar on the left side in Olayakunnam and Kanniakuruchi village limits are under active consideration.

SRI R. SRINIVASA IYER : இந்த கண்ணனுறு வடசேரியிலிருந்து பெரியகோட்டைக்குப் போய் சமுத்திரத்தில் விழுகிறது. இரண்டு ஸைடுகளிலும் ஜலம் மிதந்து வருஷத்தில் 1,000, 1,500 ஏக்கர் நிலத்திற்கு நஷ்ட மேற்படுகிறது. வடசேரியில் "கரை" எழுப்பப்பட்டிருக்கிறது. பெரியகோட்டையிலும் எழுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிருர்கள். வடசேரிக்கும் பெரியகோட்டைக்கும் நடுவில் இருக்கக்கூடிய இரு கரைகளும் என்ன கதி ஆகிறது. அதற்கு ஏதாகிலும் ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : என்னிடம் இருக்கிற தகவல்படி The Superintending Engineer has submitted plans and estimates for Rs. 38,000 to Chief Engineer (Irrigation) for forming flood banks to Kannanar drain in Olayakunnam and Kanniakuruchi village limits on the right side. These are proposed to be taken up under special minor irrigation programme. The estimates are under examination of local officers. The Chief Engineer has stated that necessary action will be taken to implement this scheme after examination is completed.

இந்த ஏற்பாடு செய்திருக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனுல், ஒரு இடத்தில் கட்டி, இன்னெரு இடத்தில் கட்டாவிட்டால் சேதம் ஏற்படும் என்று தெரியும். அதைப்பற்றி என்ஜினியரிடம் தகவல் சொல்லுகிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Hospital Employees (Government General Hospital, Madras)

* 1404 *Q*.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Engine Drivers, Electricians, Mortuary Attendants, Liftmen and Fitters working in the Government General Hospital, Madras, have not been given the revised pay scales from 1st June 1960 as recommended by the Madras Pay Commission ; and

(*b*) if so, the reason therefor?